கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு கல்விமாணித் தேர்வு - 2010/2011
(ஜனவரி/பெப்ரவரி 2013)

# OCC 4101 விழுமியக்கல்வியும் ஆளுமை விருத்தியும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

01.(அ) விழுமியக் கல்வி என்றால் என்ன? என்பதனை (கீழைத்தேய, மேலைத்தேய) அறிஞர்களின் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) கீழைத்தேய மனித விழுமியத்திற்கும் மேலைத்தேய மனித விழுமியத்திற்குமிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை அறிஞர்களின் கருத்துக்கள், மதக்கருத்துக்கள், நூல்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(15 புள்ளிகள்)

02.(அ) "தற்காலச் சமூகத்திற் காணப்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தனிமனித விழுமியத்திற் காணப்படும் குறைபாடுகளே காரணம்." இக்கூற்றை நடைமுறை உதாரணங்களின் உதவியுடன் ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) "திருக்குறளிற் காணப்படும் கருத்துக்களை ஒவ்வொரு தனிமனிதனும் பின்பற்றினால் சமூகம் ஒழுக்கமுள்ள சமூகமாக மாறும்." இக்கூற்றை திருக்குறள்களின் உதவியுடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

03.(அ) இலங்கைக் கலைத்திட்டத்தில் காணப்படும் மனித விழுமியத்தை விருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை முன்வைக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) "இலங்கையில் மனிதாபிமானப் பண்புகள் உள்ளவர்களை உருவாக்குவதில் கடந்த காலக் கல்வி முறை தோல்வி கண்டுள்ளது." இக்கூற்றை விமர்சன ரீதியாக ஆராய்க.

(09 புள்ளிகள்)

(இ) பிள்ளையின் விழுமியம் விருத்தியாவதில் இணைபாட விதானச் செயற்பாடுகளின் தாக்கத்தை ஆராய்க.

(08 புள்ளிகள்)

04.(அ) இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் ஆகிய மதங்கள் கூறுகின்ற சமூக வாழ்வுக்கு வழிகாட்டத்தக்க ஒழுக்கக் கருத்துக்களை ஒப்பிட்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) மதங்கள் குறிப்பிடும் ஒழுக்கக் கருத்துக்களை நடைமுறைப்படுத்துவதில் மத நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களைக் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

(இ) ஒரு பிள்ளையில் விழுமியத்தை விருத்தி செய்வதில் குடும்பத்தின் பங்கை ஆராய்க.

(07 புள்ளிகள்)

05.(அ) வகுப்பறையில் மாணவர்களிடையே விழுமியத்தை ஏற்படுத்துவதற்கு ஆசிரியர்கள் எவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்றலாம்?

(08 புள்ளிகள்)

(ஆ) பிள்ளைகளிடத்தே விழுமியப் பண்பு பாதிக்கப்படுவதில் சகபாடிகளின் செல்வாக்கை ஆராய்க.

(08 புள்ளிகள்)

(இ) "தற்காலத்தில் தனிமனித விழுமியத்தை விருத்தி செய்வதற்கு தகவல் தொடர்பாடல் சாதனங்கள் பெரும் சவாலாக அமைகின்றது." இக்கூற்றை ஆராய்க.

(09 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றில் எவையேனும் நான்கிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(அ) அதிபரும் ஆசிரியரும் கொண்டிருக்க வேண்டிய விழுமியப் பண்புகள்
(ஆ) விவேகானந்தர் குறிப்பிட்ட விழுமியக் கருத்துக்களை விளக்குக
(இ) ஆளுமைக்கும் விழுமியத்திற்கும் இடையேயுள்ள தொடர்புகளை ஆராய்க
(ஈ) விழுமியத்தின் நிலை (கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்)
(உ) முழுநலம் பெறல்
(ஊ) ஞாயிறு பாடசாலையும் தனிமனித விழுமியமும்

(25 புள்ளிகள்)

***